
# மன்னா


## CSI தமிழ் திருச்சபை அலைன்




பொழிவு 13 அக்டோபர் 2020 ஆகாரம் 10

# FROM THE PASTOR'S DESK

## REV. S.P BASKAR OCTOBER 2020



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!! இந்த புதிய மாதத்தை காணச்செய்த ஆண்டவரை உங்களோடு இணைந்து துதிக்கின்றேன்.

என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச்சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமைய பண்ணும் பொருட்டு, நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி.... நீதிமொழிகள்: 2:1,2

My son, if you receive my words and treasure up my commandments with you, making your ear attentive to wisdom and inclining your heart to understanding. Proverbs: 2:1,2

ஞானம்: ஞானம் என்பது அறிவு நுட்பம், மெய்யறிவு என்பதாகும், ஞானம் கடவுள் அருளும் அருட் கொடையாகும்.

அறிவு: அறிவு என்பது நம்முடைய முயற்சியின் மூலம் கிடைப்பவை ஆகும். இந்த அறிவை நாம் முயன்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

உபவாச ஜெபம்: ஒவ்வொரு முதல் வெள்ளி (02-10-2020) காலை 10.00 மணிக்கு உபவாச ஜெபம் Online zoom வழியாக நடைபெறும் திருச்சபையின் குடும்பத்தினர் அனைவரும் கலந்துக் கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

ஐக்கிய சங்கங்களின் கூடுகை: ஒவ்வொரு வாரமும் வியாழன் இரவு 8.00 மணிக்கு, நாம் ஏற்கனவே குறிக்கப்பட்டது போல ஐக்கிய சங்கங்களின் கூடுகை Online zoom வழியாக நடைபெறும் அனைவரும் கலந்துக் கொள்ளுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

தொடர்ந்து இந்த COVID-19 காலகட்டத்தில் நமது ஆவிக்குரிய விசுவாச வாழ்வில் தொடர்ந்து ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும், தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, குறிப்பாக UAE'மக்களுக்காக! அவர்களின் பாதுகாப்பிற்காக! வேலைவாய்ப்புகளை இழந்திருக்கும் மக்களுக்காக! அவர்களின் குடும்பங்களுக்காக! தொடர்ந்து ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம். அத்துடன் நமது திருச்சபையின் Online Zoom வழியாக நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வெள்ளி மாலை ஆராதனையில் சில தளர்வுகள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது, அதை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் ஆராதிக்கின்ற காலத்திற்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் திருப்பணிகள் உங்கள் ஆயர்.

# திருமறை தியானம்

பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள் , நடுக்கத்துடனே களி கூறுங்கள்.

# இரு அரசுகள்

## சங்கீதம் : 2

முன்னுரை:

தனி மனிதருக்கான இரு வழிகள் குறித்து முதல் சங்கீதத்தில் சிந்தித்தோம். இந்த இரண்டாம் சங்கீதம் நாடுகளை அல்லது அரசுகளுக்கான இரு வழிகள் குறித்து சொல்லப்படுகின்றது. ஆண்டவரின் நெறிமுறைகளுக்கு ஏற்ப ஆட்சி நடத்திய அரசர் ஒருவரின் முடி யேற்பு விழாவில் இஸ்ரவேலர் பாடிய பாடலாக இதை புரிந்து க்கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

கி-மு. 587'க்குப்பின் தாவீதின் வம்சங்கள் அழிந்து போன பின்பு பின் வருபவர்களுக்கு சந்ததிகளுக்கு எதிர்காலத்தைக் குறித்தும் விசுவாசம் / நம்பிக்கைக் குறித்தும் இந்த சங்கீதம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசரை குறித்தோ, அரசை குறித்தோ புகழ்வது மட்டுமல்ல....... தாவீதுக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குதத்த த்தையும் நிறைவேற இருக்கும் மேசியாவின் ஆட்சியைக்குறித்தும், கிறிஸ்து அரசரையும் வாழ்த்தும் சங்கீதமாக இதைக்காணலாம். அத்துடன் கடவுள் தம் மகன் இயேசு கிறிஸ்துவை அரசரா க்கியதை இந்த சங்கீதம் நமக்கு காண்பிக்கின்றது. (சங்கீதம்:13:33)

Psalm 2: Author and date unknown (Peter and John ascribed it to David in Ac 4:25--possibly in accordance with the Jewish practice of honouring David as the primary author of the Psalter). A royal psalm, it was originally composed for the coronation of Davidic kings, in light of the Lord's covenant with David (see 2Sa 7). Later, prophetic words of judgment against the house of David and announcements of God's future redemption of his people through an exalted royal son of David highlighted the messianic import of this psalm. As the second half of a two part introduction to the Psalms, it proclaims the blessedness of all who acknowledge the lordship of God and his anointed and "take refuge in him"(v.12; see note on 1:1)--as does the godly piety that speaks in the Psalms. This psalm is frequently quoted in the NT, where it is applied to Christ as the great Son of David and God's Anointed.

Serve the Lord with fear and rejoice with trembling

**சங்கீதம்: 2:1- ஜாதிகள் கொந்தளித்தது.**

இது புறவினத்தார் அனைவரையும் குறிக்கும், அரசரை எதிர்த்தவர் அவரை அரசராக அபிஷேகம் பண்ணின ஆண்டவரை எதிர்த்து கொந்தளித்தனர்.

**சங்கீதம்: 2:2-பூமியின் ராஜாக்கள் ......அதிகாரிகள்....**

இது அனைத்து எதிரி அரசுகளையும் குறிக்கின்றது, இவர்கள் ஆண்டவர் ஏற்படுத்தின அரசுக்கு விரோதமாகவும், ஆண்டவருக்கு விரோதமாகயும் ஆலோசனைப் பண்ணினார்கள். அபிஷேகம் அல்லது அருள்பொழிவு பெற்றவர்.....என்பது இங்கு அரசராக திருநிலைப்படுத்தப்பட்டார் "மசிகா" என்ற எபிரேயச்சொல் பயன்படுத்தப் படுகிறது. இதற்கு திரு எண்ணையால் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று பொருள். இந்த சொல் கிரேக்கத்தில் "மேசியாஸ்" அல்லது "கிறிஸ்தோஸ்" என்றும் தமிழில் மெசியா அல்லது கிறிஸ்து என்று அழைக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட அபிஷேகத்தை எதிரி அரசர்கள் எதிர்த்தார்கள்.

**சங்கீதம்: 2:3-அவர்கள் கட்டுகளை அறுத்து.**

இது கடவுளுக்கு எதிரான எதிரிகளின் கட்டுகளை அகற்றி போடுவோம் என்பதாகும்.

**சங்கீதம்: 2:4- பரலோகத்தில் வீற்றிருப்பவர்.**

இது விண்ணுலகு / பரலோகத்தின் அரியணை என்பது ஆண்டவருக்கு உரியது - ஆண்டவர் ஏற்படுத்தின அரசருக்கு அந்த அரியணையில் உரிமை உண்டு.

**சங்கீதம்: 2:5-கலங்கப் பண்ணுவார்......**

இது எதிரிகளை கலங்க பண்ணுவார், நேர்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ விரும்புவோருக்கு சில எதிரிகள் இருப்பார்கள் அவர்களை ஆண்டவர் கலங்கப்பண்ணுவார்.

**சங்கீதம்: 2:6-நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில்.....**

மோசே ஆண்டவரைச் சந்தித்து சட்டங்கள் பெற்ற "சீனாய் மலை" முதல் முதலில் ஆண்டவரின் மலை என அழைக்கப்பட்டது, பின்னர் சாலமோன் சீயோன் மலையில் ஆலயத்தைக் கட்டினார். (2. சாமுவேல்.5:7-9) எனவே சீயோன் மலையே புனித மலை, ஆண்டவரின் மலை, ஆண்டவரின் உறைவிடம் என அழைக்கப்பட்டது.

**சங்கீதம்: 2:7- ஆண்டவர் ஆணையிட்டு உரைத்தது.**

நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உண்மை பெற்றெடுத்தேன் "இன்று" என்பது அரசரின் முடிசூட்டு விழாவை குறிப்பதாகும். பெற்றெடுத்தேன் என்பது

அரசைத்தம் தான் பிள்ளையாகத் தத்து எடுத்தது சுட்டிக்காட்டுகிறது. இது ஆண்டவர் ஏற்படுத்தின அரசைக் குறித்து காண்கிறோம்.

**சங்கீதம்:2: 10-12-ராஜாக்களே உணர்வடையுங்கள்.**

இங்கு ஆண்டவருக்கும் அவர் அபிஷேகம் பண்ணின அரசருக்கும் பணிந்து நடக்க எதிரிகளுக்கு அழைப்பு கொடுக்கப்படுகிறது. "உணர்வடையுங்கள்" என்பது ஆண்டவரை வழிபட்டு அவருக்கு அடிபணிந்து நடப்பதாகும், ஆண்டவருக்கு பயந்து நடப்பதே ஞானத்தின் தொடக்கம் (நீதிமொழிகள் :1:7) என்று கூறப்படுகின்றது. எனவே ஆண்டவரை எதிர்த்த புறவினத்தார் "யாவே" - வை வழிபட மனம் மாறி வர அழைக்கப்படுகின்றனர். இது கடவுள் நீதியுள்ளவர், அன்புள்ளவர், கோபப்படுபவரல்ல..... என்பதைக்காட்டுகிறது.

**நிறைவாக...**

மனிதரின் மன மாற்றம் ஆண்டவர் கொடுக்கும் அருட்கொடையான வாழ்வு ஆகும். எனவே நாம் மனமார ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். நாம் நம்மை அர்ப்பணித்து ஆண்டவரின் வழியில் நடக்க நம்மை அர்ப்பணிப்போம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் பணியில் உங்கள் ஆயர்
Rev. S. P. Baskar

இயேசுவை தெரியும்... வசனமும் புரியும்...
ஆனால் கனிகள் இல்லை
பயனென்ன ???

விழித்துக்கொள் கிறிஸ்தவனே...

மன மாற்றம் தேவை

எஸ்தர்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

**உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!**

## யூதர்களின் விடியல் எஸ்தர் (எஸ்தர்: 2:12-14)

யூதர்களை ஆண்டு வந்த ஆகாஸ்வேரு மன்னனின் தளபதியான ஆமான் யூதர்களைக் கொடுமைப்படுத்தி, அடிமைப்படுத்தி அழிக்க வேண்டும் என்ற திட்டத்தை எஸ்தர் முறியடித்தார். எனவே யூதர்களின் விடிவெள்ளி என்று அழைக்கப்பட்டார். யூதர்களின் வாழ்வுக்காக போராடியவர், யூதர்களை பல குறுநில மன்னர்கள் தங்களின் உருவச்சிலையை வணங்கும்படி வற்புறுத்தினர். இதற்கு அடிபணியாத யூத மக்களைக் கொன்று குவித்தனர். இக் கொடுமையில் இருந்து மக்களை மீட்டெடுக்க எஸ்தர் தன்னை அற்பணித்து வெற்றி கண்டார்...

## அழகும் அறிவும் உடையவர் எஸ்தர் (எஸ்தர்:2:17,18)

கன்னிப்பெண்கள் அனைவரிலும் அவரே மன்னரின் கண்களில் மிகுதியான தயவு பெற்றவர். எனவேதான் அரசியாகும் தகுதியும் பெற்றார். அத்துடன் தமக்கிருந்த நெருக்கடியில், அன்றைக்குள்ள சூழல் தன்னை ஒரு பயனுள்ள செயலுக்கு பயன்படுத்திக்கொள்ள ஒப்படைக்கிறார். மொர்தெகாய் தனக்குள் கட்டளையிட்ட வற்றை மீறி நடக்காமல் பார்த்துக்கொண்டார். இது இவரின் புத்திக்கூர்மையை காட்டுகிறது.

## ஒப்படைப்புள்ள பெண் எஸ்தர் (எஸ்தர்: 4:16)

யூதர்களின் வாழ்வு வளம்பெற தன்னை ஒப்படைத்தவர் எஸ்தர், சட்டத்திற்குப் புறம்பாக இருந்தாலும் மன்னரிடம் சென்று முறையிடுவேன், இல்லாவிட்டால் அழிவதாக இருந்தால் அழிகிறேன் என்று சொல்லி சவாலுடன் சென்றவர். தமக்கு ஆபத்து என்று தெரிந்தும், உன்னால் நோன்பின் மூலம் அரசனின் கவனத்தை ஈர்க்கிறார். அரச தந்திரம் என்பது அரச குடும்பத்திற்கு மட்டும்தான் தெரிந்திருக்க வேண்டியதில்லை. ஓர் எளிமையான பெண்ணுக்கும் இருக்கும் என்பதை தன்னுடைய ஒப்படைப்பின் மூலம் காண்பித்தார்....

## பக்தியுள்ள பெண் எஸ்தர் (எஸ்தர்: 9:25)

இவருடைய பக்தியினால் நாட்டில் அமைதியும், பாதுகாப்பும் யூதருக்குக் கிடைக்க வழிவகை செய்தது. இருட்டுடுத்து சாம்பலில் அமர்ந்து, உண்ணா நோன்பு இருந்தால் மட்டுமே பக்தி என்று எண்ணிக்கொண்டிருந்த காலத்தில் மக்களுக்கு அமைதியும், பாதுகாப்பும் கிடைக்கப் படுவதே பக்தி என்பதை தன் செயலின் மூலம் நிரூபித்துக் காட்டினார். இதுவே அவரின் பக்திக்கான அடையாளமாகும்......

இன்றைக்கு நாமும் எஸ்தரைப்போல நல்ல பண்புள்ளவர்களாய் வாழ ஆண்டவர் நம்மையும் அழைக்கின்றார்...... நாம் நம்மை ஆண்டவரிடம் அர்ப்பணிக்க அழைக்கப்படுகின்றோம்.....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!!
ஆண்டவரின் திருப்பணியில் உங்கள் ஆயரம்மா...
**MRS. E. NANCY BASKAR**

Esther

CHARACTER BEAUTY FAITH WISDOM

# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே..

இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் அனைவருக்கும் அக்டோபர் மாத வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மை போஷித்து போதித்து வழிநடத்தின தேவாதி தேவனை நன்றியோடு துதிப்போம்.

இவ்வுலகமும் – வாழ்வும் - பணிகளும் நிரந்தரமற்றது…என்பதை நம் கண்களுக்குப் புலப்படாத விஷக்கிருமி நமக்கு அடிக்கோடிட்டு காட்டிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில்; நாம் நல்ல உடல் சுகத்துடன் வாழ்வதற்கு ஆண்டவர் பாராட்டுகின்ற கிருபைகளை எண்ணி திருச்சபையாக நன்றி செலுத்துவோம்.

ஆலயக் கட்டுபாடுகள் முற்றிலும் நீக்கப்பட, நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் விடுதலைபெறவும், தொற்று நாட்களில் வாழ்வாதாரம் இழந்து, வருமானம் குறைந்து கண்ணீரின் பள்ளத்தாக்கை கடக்கிற யாவருக்காகவும் நாம் யாவரும் கண்ணீரோடும் ஊக்கத்தோடு திறப்பிலே நிற்போம். நடைபெற இருக்கின்ற வருடாந்திர பொதுக்குழு கூட்டத்திற்காக யாவரும் ஜெபிக்க அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூடுகை மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு அளித்த அருள்திரு.எஸ்.பி.பாஸ்கர் போதகர் ஐயா அவர்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். சபையார் தவறாமல் ஆன்லைன் மூலமாக ஒளிபரப்பப்படும் ஆராதனைகளில் பங்கு பெறுங்கள்; கர்த்தருடைய சத்தத்தை வேத வசனங்களின் வாயிலாக அனுதினமும் கேட்போம்; கர்த்தரோடு தொடர்ந்து நிலைத்திருப்போம்.

அன்பானவர்களே…தாவீது அரசனைப்போல் பவுல் அப்போஸ்தலனைப்போல் கர்த்தருடைய நாமத்தை குறித்தே மேன்மை பாராட்டுவோம். நாம் இவ்வுலகில் பெற்றுள்ள எந்தநன்மையும் தேவன் நமக்கு ஈவாக தந்தது; எனவே நம்மை இந்த உலகில் ஆசீர்வதித்து நடத்துகின்ற தேவனை உயர்த்துவோம்…இப்புதிய மாதத்தில் தெய்வ பயத்துடன் ஆண்டவரை பின்பற்றுவோம்.. இறையாசி உங்களுடன் தங்கி இருப்பதாக.

இப்படிக்கு …கிறிஸ்துவின் பணியில்…

எஸ். சுரேஷ் ராஜன்.

16 OCT

AGM 2020

# JUNOIR - A









D. JASON ERIC




Teacher: Mrs. Anitha S. Rajan

# தாழ்மைப்படுதல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,

பரிசுத்த வேதாகமத்தில் லூக்கா 14:11'ல் தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான் என்று எழுதப்பட்டபடி தன்னை தாழ்த்துவது ஒரு கிறிஸ்தவனின் தலையாய பண்பு. நம் பரிகாரியாகிய கிறிஸ்து இயேசு மரணபரியந்தம் நம்மை தாழ்த்தினார். சத்தியங்களை அறிந்தும், நாம் நம்மை தாழ்த்துவதில் குறை உள்ளவர்களாக இருக்கிறோம். நம்மை நாம் தாழ்த்தும் போது தேவன் மற்றவர்களை கொண்டு நம்மை தாழ்த்த விடமாட்டார்.

தேவன் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். நம்மை தாழ்த்தும் போது தேவன் தேசத்துக்கு ஷேமத்தை கொடுக்கிறார் என II-நாளாகமம் 7:14 எழுதப்பட்டுள்ளது. இயேசு இந்த உலகத்தில் வந்து தன்னை தாழ்த்தியப்போது மகிமையில் உயர்த்தப்பட்டார். எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் அவருக்கு கொடுக்கப்பட்டது. நம்மை நாமே தாழ்த்தும் போது தேவனிடத்தில் கிருபை கிடைக்கும். நம்மை தாழ்த்தினால் நமக்கு பொல்லாப்பு வராமல் தேவன் நம்மை பாதுகாப்பார். இதற்கு உதாரணமாக வேதத்தில் I இராஜாக்கள் 21:19-27'வரை வாசிக்கும் போது கர்த்தர் ஆகாப் ராஜாவோடு பேசின போது, அவன் உபவாசம் பண்ணி தன்னை தாழ்த்தினான் என எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஆகாபின் மனைவி தாழ்மைப்படவில்லை. நாய்கள் யேசபேலின் மாம்சத்தை நக்கினது.இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் நியாயத்தீர்ப்பில் பட்சிக்கிற அக்கினி போன்றவர்.

மேலும் II இராஜாக்கள் 22:19 யோசியாவை குறித்து சொல்லும் போது அவன் நியாயப்பிரமாணத்தை அறியாதவன். ஆனால் அதைக் கேட்டபோது நடுங்கினான். தன் வஸ்திரங்களை கிழித்தான் என எழுதப்பட்டுள்ளது. அவன் ஜிவிதத்தில் நிறைய போராட்டங்கள் இருந்தது. கர்த்தருடைய சமூகத்தில் தன்னை தாழ்த்தினப்போது தேவன் அவனுக்கு சமாதானத்தை கட்டளையிட்டார்.

அதைப்போலவே II நாளாகமம் 33:12,13 மனாசே நெருக்கப்படுகையில் தன்னை தாழ்த்தினான். அதனால் பொல்லாப்புக்கு தப்புவிக்கப்பட்டான். அவனுக்கு ராஜ்யம் திரும்ப கிடைத்தது. நாம் நெடுகப்போய் தண்டிக்கப்படாமல் இருக்கும்படியாக வேத வசனங்கள் நமக்கு திருஷ்டாந்தமாக எழுதப்பட்டுள்ளது.

ஆம் கர்த்தருடைய பிள்ளைகளே, நாமும் தேவ வசனங்களுக்கு கீழ்ப்படிந்து, நம்மை நாமே தாழ்த்தி தேவ சமாதானத்தால் தேவ கிருபையால் நிரப்பப்படும் படி தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

திருமதி. பபிதா பாபு



# உயிரெழுத்தும் உயிருள்ளவரும்

அன்பு நிறைந்தவர்

ஆறுதல் அளிப்பவர்

இரக்கம் உள்ளவர்

ஈடு இணை இல்லாதவர்

உதவி செய்பவர்

ஊண் உறக்கம் தருபவர்

என்றென்றும் மாறாதவர்

ஏழையின் தோழன்

ஐயாயிரம் பேரை போஷித்தவர்

ஒருவராய் இருப்பவர்

ஓதும் வழிகாட்டியவர்

ஔடதமானவர்

தேவனே....!

என் தாய்
என்னோடு இருக்கும் போது
என் தாயின்
சிலையை செய்து
அதை கும்பிட
நான் விரும்பவில்லை,

அவ்வாறு செய்தால்..
என் தாய்
செத்து விட்டது போலாகிவிடும்.

அதேபோல..

தாயாய், தந்தையாய்
நீர் என்னோடு
இருக்கும் போது,
உமக்கு சிலை செய்து
வணங்க நான் விரும்பவில்லை

அவ்வாறு செய்தால்
நீர் மரித்து
உயிரோடு எழுந்தது

பொய் என்று ஆகிவிடுமே....!



**இந்த சமுதாயம் முன்**
**நீ நிமிர்ந்து நிற்க....**
**தேவன் முன்பாக**
**முழங்காலில் நில்**

Men's FELLOWSHIP



# கொரோனாவும் - குஷ்டரோகமும்



## வேதப்பகுதி: லூக்கா 5:12-14

லூக்கா 5:12 பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில் குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்ட முகங்குப்புற விழுந்து: ஆண்டவரே **உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும்** என்று அவரை வேண்டிக்கொண்டான்.

உலகமுழுவதும் ஒரு இக்கட்டான நிலையை தேசங்கள் சந்தித்து வருகின்றன. ஒரே ஒரு வைரஸ் 200 க்கும் மேற்பட்ட நாடுகளை கதிகலங்க வைத்துக் கொண்டிருகின்றது. மரண பயங்ககளும் திகில்களும் எல்லா மனிதர்களிடத்திலும் காணப்படுகின்றது. ஊரெல்லாம் ஒரே குரல்… தனித்திரு விழித்திடு விலகியிரு 144 தடை ஊரடங்கு உத்தரவு –

இவையெல்லாம் எதற்காக? ஒரே ஒரு உயிர்கொல்லி நோயிலிருந்து மனிதன் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான். ஒரு சரீர நோயிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள மனிதன் இத்தனை பிரயாசங்களைப்படுகிறான். ஆனால் நாள்தோறும் அவனை அழித்துக் கொண்டிருக்கின்ற ஆத்தும நோயைக்குறித்து சிந்திக்க சீர்திருத்த சத்தியங்கள் மறுத்து உணர்வற்றிருக்கிறான். கொரோனாவை விட பலமடங்கு மனிதனுக்கு (உங்களுக்கு) ஆபத்தை கொண்டுவருகின்ற அந்த ஆத்தும நோயைப் பற்றி சிந்திக்கவும் உங்களை அழைக்கிறேன்.

லூக்கா 5:12: குஷ்டரோகம் நிறைந்த மனிதன்.. வேதத்தின் பல்வேறு பகுதிகளில் மற்ற எந்த நோயைக் காட்டிலும் இந்த குஷ்டரோகத்தை குறித்தும் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட மனிதனை குறித்தும் மிக சிறப்பான கவனம் செலுத்தி பேசுகிறதை நாம் கவனிக்கலாம்.

பிரதானமாக லேவியராகமம் 13 14 அதிகாரங்களில் இந்த நோயின் தன்மையை குறித்தும் அதின் விளைவுகளை குறித்தும் அதிலிருந்து மீட்கப்பட்டவன் செய்யகூடிய சரீர சுத்திகரிப்பைக் குறித்தும் நமதாண்டவர் விரிவாக பேசுகிறார். ஆரோனின் சகோதரி **மிரியாமுடைய** குஷ்டரோகத்தைக் குறித்தும் **நாகமான், உசியா ராஜா** ஆகியோரது குஷ்டரோகத்தைக் குறித்தும் வேதம் நமக்கு அநேக காரியங்களை கற்றுத்தருகிறது.

முதலாவதாக நாம் கொரோனாவுக்கும் குஷ்டரோகதிற்கும் உள்ள ஒருசில ஒற்றுமைகளை பார்ப்போம். இன்று நம்மைப் பாதித்து கொண்டிருக்கின்ற இந்தக் கொரோனா நோயை போலவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இருந்த குஷ்டரோகமும் அதினால் பாதிக்கப்பட்ட மனிதர்களும் இருந்தார்கள். கொரோனாவைப் போலவே குஷ்டரோகத்தை குணமாக்குவதற்கு எந்தவித மருந்தும் அக்காலத்தில்லை. கொரோனாவைப் போல குஷ்டரோகமும் ஒரு தொற்றுநோய். கொரோனா மெல்ல மெல்ல சரீரத்தை பாதித்து முற்றிலும் அழிப்பதுபோல குஷ்டரோகத்தால் பாதிக்கபட்ட மனிதனும் தீவிரமான மரணத்தை அடைகிறான். கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர் குடும்பத்தைவிட்டு எல்லோரையும் விட்டு தனிமையாக்கப்படுவதுபோல குஷ்டரோகியும் பட்டணத்தை விட்டு வனாந்தரத்திலே தனிமைப்படுத்தபட்டான். கொரோனா நோயுள்ள மனிதன் தொடுகிற சக மனிதன் இடம் மற்றும் பொருட்கள் எல்லாம் அந்த நோயினால் பாதிக்கப்படுகிறது அதைப்போலவே குஷ்டரோகியும் தன்னை சுற்றியுள்ள தான் தொடுகிற எல்லாவற்றையும் தீட்டுள்ளதாக்குகிறான் கொரோனாவில் பாதிக்கபட்டவனுக்கு மருத்துவமனை உள்ளது தற்காலிகமான சிகிச்சை பெறலாம். ஆனால் குஷ்டரோகி பாதுகாப்பற்ற வெளிகளில் கிடக்க வேண்டும். குஷ்டரோகி கையில் விலங்கு

போடப்பட்டு அவன் தீட்டானவன் என்று கூறி எல்லா மனிதர்களிலிருந்தும் தனிமைப் படுத்தபடுவான். வனாந்திரத்திலிருந்து அவன் ஊருக்கு வந்தால்

குஷ்டரோகியான மனிதனின் சரீரம் உணர்வுகளை இழந்து உணர்ச்சியற்று காணப்படும்.. இங்கு இயேசுகிறிஸ்துவிடம் வரும் குஷ்டரோகி அவன் வெறும் குஷ்டரோகி என்று கூறாமல் குஷ்டரோகம் நிறைந்தவன் என்று வேதம் கூறுவதைப் பார்க்கிறோம். ஒரு வகையில் சொல்லப்போனால் பாவத்திலிருக்கிற மற்றும் பாவம் செய்கிற ஒவ்வொரு மனிதனும் ஆவிக்குரிய நிலையில் குஷ்டரோகி தான். பாவத்தில் வாழ்கிறவன் மெய்யான கடவுளை அறிய விரும்பான் கடவுளைப் பற்றிய காரியங்கள் அவனுக்கு விருப்பமில்லாதவைகளும் கடினமானவைகளுமாம். மனிதனும் தன்னை சுற்றியுள்ள எல்லாவற்றையும் கறைபடுத்தி வாழ்பவன். சக மனிதனையும் அழிவிற்கு ஏதுவாக நடத்துபவன். எல்லோரோடும் இணைந்திருந்தும் தனிமையாய் வாழ்பவன். உங்களது என்னுடைய உண்மையான உள்ளான நிலையும் இதுதான்.

உங்கள் இருதயத்தை கேட்டுப்பாருங்கள் உங்கள் சுபாவம் எப்படி இருக்கிறது.?

கடவுளைப் பற்றிய காரியங்களில் உங்கள் ஈடுபாடு எவ்வாறு உள்ளது?

எவ்வளவு தூரம் அதை கடமையாக அல்லது ஒரு வேலையைப் போல செய்கிறீர்கள்?

தேவ சமுகத்தில் எவ்வளவு நேரம் அல்லது எவ்வளவு மகிழ்ச்சியாய் ஜெபம் செய்கிறீர்கள்?

கடவுளை அறிவதில் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் செலவு செய்கிறீர்கள்?

தேவனுக்குள்ளான ஆராதனையை எப்படிப்பட்ட மனமகிழ்ச்சியோடு ஆராதிக்கிறீர்கள்?

கொரோனாவும் குஷ்டரோகமும் சொல்லக்கூடிய அடிப்படை விஷயம் ஒன்றுதான் அது உங்கள் ஆத்துமாவை அழித்து கொண்டிருக்கின்ற உங்கள் பாவம் என்னும் ஆவிக்குரிய நோயையைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்கள் பாவம் கடவுளிடத்திலிருந்து எவ்வளவு தூரம் உங்களைப் பிரித்து வைத்திருக்கின்றது. உள்ளான ஆவிக்குரிய நிலையில் தேவனைவிட்டு நீங்கள் ரொம்ப தூரம் தனிமைப்படுத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருகிறீர்கள். பாவம் உங்கள் ஆத்துமாவை வஞ்சித்து உங்களை அழித்துக் கொண்டிருக்கிறதைக் குறித்து

நீங்கள் அக்கறையற்று காணப்படுகிறீர்கள்.!

எச்சரிக்கையாயிருங்கள்.!





# நம் தேவன்

**“தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி”**

**(2 பேதுரு 1:3)**

நம் தேவன் எப்படிப் பட்டவர் அவரது பண்புகள் என்ன என்பதனை வேதம் நமக்குத் தெளிவாக கூறுகிறது. நம் அனுதின வாழ்வில் தேவனுடைய மகத்துவங்களை எந்த அளவிற்கு அறிந்து செயல் பட எத்தனிக்கின்றோமோ அந்த அளவுக்கு அவர் கரத்தின் மேன்மையை நிறைவாகப் பெற முடியும். நம் தேவன் எப்படிப் பட்டவர்.

**சர்வ வல்லவர்:** தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை. ( லூக்கா 1:37) தேவன் எதை விரும்புகிறாரோ அதையெல்லாம் செய்கிறார்.(சங் 115:3). அவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. அவர் செய்ய நினைத்ததை ஒருவரும் தடை செய்ய முடியாது (யோபு 42:2).

எந்த வியாதியையும் சுகமர்க்க வல்லவர், எந்த தேவையையும் சந்திக்க வல்லவர், எந்த பிரச்சனையையும் தீர்க்க வல்லவர், எந்த தடையையும் தகர்க்க வல்லவர், எவரையும் இரட்சிக்க வல்லவர்.

**சகலத்தையும் அறிந்தவர்:** அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமமாயிருக்கிறது. (எபி 4:13) ஆண்டவருக்கு மறைவானது ஒன்றுமில்லை அவரை நாம் ஏமாற்ற முடியாது எந்த விதமான மாய்மாலங்களை செய்யவும் முடியாது.

நாவில் சொல் பிறவாததற்கு முன்னமே அவர் அதை அறிந்திருக்கிறார். (சங் 139:4) நம்முடைய கிரியைகளை அதின் குறைபாடுகளை அறிந்திருக்கிறார் (வெளி 2: 2 - 9,13,19) நம்முடைய பாடுகளை வேதனைகளை அறிந்திருக்கிறார்(யாத் 3:7) இதயங்களை ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்(1நாளா 28:9) நமக்கு வேண்டியவைகளை நமது பரம பிதா அறிந்திருக்கிறார்.(மத் 6:32)

**சர்வ வியாபி:** பாதாளபரியந்தம் தோண்டி பதுங்கி கொண்டாலும், என் கை அவ்விடத்திலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவரும். அவர்கள் வான பரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலிருந்து அவர்களை இறங்கப்பண்ணுவேன். அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டாலும், அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன். ஆழத்திலே போய் என் கண்களுக்கு மறைந்து கொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்க பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன். (ஆமோஸ் 9:2,3)

அண்டசராசரங்களையும் படைத்தவரும் ஆழுகை செய்கிறவருமாகிய நமது தேவன் அவைகளின் மேல் ஒரே சமயத்தில் வியாபபத்திருக்கிறவராய் இருக்கிறார்.

**நித்தியமானவர்:** பர்வதங்கள் தோன்று முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அனாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். (சங் 90:2)

நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமள்ள ராஜனுமாய் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு கனமும் மகனிமையும் சதா காலங்களிலம் உண்டாயிருப்பதாக.(1 தீமோ 1:17)

அவருக்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை. நித்திய நித்தியமானவர்.

**ஆராயப்பட முடியாதவர்:** கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத் தக்கவருமாயிருக்கிறார், அவரது மகத்துவம் ஆராய்ந்து முடியாதது. (சங் 145:3) தேவனின் முழுத்தன்மையையும் அவரது மகத்துவத்தையும் ஒருவரும் இந்நாள்வரைக்கும் அறிந்நதில்லை. கிறிஸ்துவின் வழியாய் பரிசுத்தவான்கள் வழியாய் நமது அனுபவங்கள் வழியாய் தேவனை அறிந்து கொள்ளுதல் நம் வாழ்வில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

**பரிசுத்தமானவர்:** நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்ன வென்றால், உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். (லேவி 19:2)


தேவன் ஒருவரத்தவிர பூரண பரிசுத்தா் யாரும் இல்லை. பரிசுத்தம் தேவனின் பிரதான பண்பு என்பதனை வேதம் நமக்குத் தெளிவாகக் கற்றுத்தருகிறது. அவர் தீமையை பார்க்க மாட்டாதவர்.


**அன்புள்ளவர்:** அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார்.(1யோவான் 4:8)

அன்பு கூர அருகதையற்றவர்களையும் நேநிக்கின்றவர். நாம் பாவிகள், தேவ அன்பை மறந்து உலகத்தோடு ஒப்புரவாகிப் போனவர்கள். ஆகிலும் நம்மை அவருடைய பிள்ளைகளாக்கி நம்மில் நித்தியமாய் அன்பு கூருகிறவராய் இருக்கிறார்.

ஆம் அருமையானவர்களே!! இத்தனை மேலான பண்புகள் நிறைந்த தேவனை அறிகிற அறிவையும், ஆராதிக்கும் பாக்யத்தையும் பெற்ற நாம் இத்தனை மேலான பாக்யத்திற்கு நாம் பாத்திரவான்கள் தானா என நம்மை அனுதினமும் ஆராய்ந்து பார்ப்போம். தேவ ஆசீர்வாதங்களை நிறைவாய் பெறுவோம்.


**Mr. M. Nesamony**




THE JONAH STORY
REF: BOOK OF JONAH 1- 4

KIDSCOLOURING

# Jonah




It's Not Just Colouring... Narrate the Story to your Child




**Fill the missing word. Find the words that you have found in the grid.**



1. Ni_e_eh

2. J__a_



3. S_i_






4. Ca_t_i_

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | X | M | K | C | T | U | V | K | B | S | T |
| H | B | T | P | R | E | A | C | H | I | N | G |
| E | S | C | U | B | R | G | S | O | T | I | C |
| L | Y | A | S | O | N | L | A | K | I | N | G |
| T | B | P | F | I | S | H | M | T | M | E | X |
| E | F | T | Y | U | O | P | E | A | E | V | K |
| R | T | A | T | I | M | O | V | R | S | E | M |
| H | R | I | D | H | S | H | I | P | M | H | J |
| P | O | N | J | S | B | C | R | M | R | A | O |
| K | D | T | H | R | O | N | E | T | O | F | N |
| T | S | S | A | C | K | C | L | O | T | H | A |
| G | C | G | N | I | P | E | E | L | S | G | H |

5. S_ee_in_



6. _i_h



7. _ra_i_g





8. _a_kc_ot_



9. _h_on_



10. _h_l_er



11. _in_

12. _i_g



13. Vo___



14. _r_ac_in_



15. S_or_



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# The Book of JONAH

## ACROSS

1. What vegetable grew up and gave Jonah shade?
2. God wanted Jonah to have___________ on the Ninevites
3. The captain said "___________ unto your God of Mercy"
4. Jonah was a _______________ of God
5. God sent a great ______________ upon the ship.
6. Who told his people to mourn and pray to God?
7. God told Jonah to go to ________________ and preach
8. What rose in the Sky and cause a great heat?

## DOWN

1. What ate and killed the wine?
2. The Name of the Prophet who fled from God.
3. Jonah cried unto the people to ____________
4. Jonah was to have mercy and _____________ Upon the people of Nineveh
5. Jonah took a ship and fled to ______________
6. What did the gourd grow on?



JUNIOR

THANK YOU

#YOUR NAME HERE

# FROM THE BOOK OF

# JONAH

FOR GOD SO LOVED NINEVEH

## INTER & SENIOR

1. **Why did God Scold Jonah…?**
2. **What was Jonah's Commission…?**
3. **What lesson did Jonah Learn…?**
4. **Write the Background of Jonah…?**
5. **Describe the Character of Jonah in Simple word…?**
6. **To whom all God's Mercy shown in this story…?**
7. **How many times FISH is Mentioned in the book of Johan…?**

**Fill in the Blanks:**

8. **The Ninevites believed Jonah's message and repented, wearing…………………………… And ……………………………**
9. **120,000 represents ………………………………………………**
10. **The ……………………………… One of Israel's fiercest enemies.**

**Dusty Bibles lead to Dirty Lives**

You did it!

# Congratulations

## Kidz Colouring

KARISS ANGELO
CHRIS GABRIEL
JANIA PRENI
JOHAN SANJO
HAZEL HARTLYN
REAGAN SHAN
CRASSLIN DEVONA
JEMIMA ASHNI
JASON ERIC

## Spiral Puzzle

JASON ERIC
JOHAN SANJO
JEREMIAH
JONATHAN



## Case Study

ROSHAN
SHELBINO PAUL
MERVIN SAMUEL
ANNLIN
ANGELIN
JOSHIKA
JOSHUA
JONATHAN

## ARE YOU UP FOR THE CHALLENGE?

## COMING SOON




# ALPHABET BIBLE A to Z

GET READY!

# Happy Birthday!

| | |
|---|---|
| 1-Oct | Mrs. Sheeba Derick W/o Mr. Derick Joy |
| 1-Oct | Mrs. Fanny Esther W/o Mr. Derin Joy |
| 1-Oct | Baby. H. Johanna Jane D/o Mr. Heavin Heba |
| 3-Oct | Baby. Smyrna Syntche D/o Mr. Santhosh Kumar |
| 4-Oct | Mr. Antony Lerinson S/o Mr. Antony Gerald |
| 4-Oct | Mr. Praveen Paul |
| 5-Oct | Mr. Immanuel Suthan S/o Mr. David Sorna Balan |
| 5-Oct | Baby. Nivina D/o Mr. Chandrasekar |
| 7-Oct | Mr. Sharvin John |
| 8-Oct | Ms. Akila D/o Mr. Ravi Chandran |
| 9-Oct | Ms. D. P. Mercy D/o Mr. Deva Prakash |
| 11-Oct | Mr. Prabu Dinesh Kumar |
| 13-Oct | Mrs. Anitha George W/o Mr. Geroge Rose |
| 15-Oct | Ms. Erline Bernice Raj D/o Mr. Saman Rajkumar |
| 15-Oct | Mstr. Jovin S/o Mr. Geroge Rose |
| 15-Oct | Mr. Godson Daniel Rao S/o Mr. Danesh Rao |
| 17-Oct | Mrs. Sahila Grace Justin W/o Mr. Justin Oliver |
| 18-Oct | Mrs. Helen Hemabai W/o Mr. Jayan Dharmaraj |
| 20-Oct | Mr. Aidean Joyphonse Derick S/o Mr. Derick Joy |
| 20-Oct | Mrs. Patricia Santhi W/o Mr. Jason Samuel |
| 22-Oct | Mrs. Sheeba W/o Mr. Deva Prakash |
| 23-Oct | Baby. B.N Kariss Angelo D/o Rev. S.P Baskar |
| 23-Oct | Mrs. Biblin Christabel W/o Mr. Nelson Sopitharaj |
| 24-Oct | Mr. Justin Oliver |
| 24-Oct | Baby. Jemimah. A D/o Mr. Ashok Kumar |
| 27-Oct | Mr. Jayan Dharmaraj |
| 29-Oct | Ms. Abigail Christine D/o Mr. Praveen Paul |
| 31-Oct | Mstr. Eion Jayden S/o Mr. Jason Samuel |

October

# HAPPY WEDDING ANNIVERSARY

5th Oct

Mr. Ravindra &

Mrs. Sunitha

6th Oct

Rev. S.P Baskar &

Mrs. Nancy Angelo

11th Oct

Mr. Daniel Durai Singh &

Mrs. Pamela

21st Oct

Mr. Prabhu Dinesh Kumar &

Mrs. Rebecca

# பாடல் பிறந்த கதை

## இயேசு அழைக்கிறார்...



மத்தேயு 11:28
பாடல் : F.J. செல்லத்துரை
ராகம் : F.J. செல்லத்துரை.
சென்னை மெரினா கடற்கரை!

கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பலவித எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்தனர் ! வியாதியுற்றோர், பிள்ளைப் பேறற்றோர், வேலை தேடி சோர்வுற்றோர், பிரச்சனைகளில் சிக்குண்டோர், தங்களுக்கு அருமையானவர்களை இழந்து, ஆறுதலின்றித் தவிப்போர், என, எண்ணற்ற தேவைகள், ஏக்கங்கள் நிறைந்த அக்கூட்டத்தில் தேவ செய்தியளிக்க வருகிறார் சகோதரர் அறிவர் D.G.S.தினகரன் !

இசைக்குழு மென்மையாய் இசைக்க, தனக்கு விருப்பமான இப்பாடலை இனிமையான குரலில் பாடுகிறார். தேற்றரவாளனாகிய தூய ஆவியானவரின் பிரசன்னம் மைதானத்தை நிரப்புகிறது. ஆறுதலும், அற்புத சுகமும் ஆண்டவரிடமிருந்து அநேகர் பெற்று நன்றியுடன் தோத்தரிக்கின்றனர் !

உலகின் பல நாடுகளில், பல பட்டணங்களில் வல்லமை நிறைந்த அற்புத ஊழியத்தை தேவ பெலத்துடன் செய்துவரும் சகோதரர் தினகரனின் நற்செய்திப் பணிக்கு, அவர் தெரிந்து கொண்ட தலைப்பு, “இயேசு அழைக்கிறார்” ஊழியங்கள் !.

ஆம்! தேவ ஆசீர்வாதம் நிரம்பிய இவ்வூழியங்களுக்குப் பெயர் கொடுத்த இப்பாடலை சகோதரர் தினகரனே அவரது நற்செய்திக் கூட்டங்களில் பாடிப் பிரபலமாக்கினார். இப்பாடலைக் கேட்கும் எவரும் சகோதரர் தினகரனையும் அவரது அற்புத ஆறுதல் ஊழியங்களையும் நினைவுகூருமளவிற்கு, இப்பாடல் அவரோடு ஒன்றிவிட்டது. எனவே, அவரோடு இவ்வாறு நெருக்கமாக இணைந்த இப்பாடலை இயற்றியது அவரே என அநேகர் எண்ணியதில் வியப்பொன்றுமில்லை. இதினால், சகோதரர் தினகரனே இப்பாடலாசிரியரைத் தன் நற்செய்திக் கூட்டங்களில் அறிமுகம் செய்து வைத்தார்.

இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இயேசுவின் அன்பையும்,

மனதுருக்கத்தையும் எளிய வார்த்தைகளுடன் அறிய உதவும் இப்பாடலை எழுதியவர் சகோதரர் கு.து. செல்லத்துரை ஆவார். இவர் ஜோதி-சைமன் தம்பதியருக்கு 26.08.1936 அன்று அரக்கோணத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அரக்கோணத்தில் முடித்து, பின்னர் சென்னையில் கல்லூரித் துவக்க வகுப்புவரை தொடர்ந்தார்.

சகோதரர் செல்லத்துரை 1972-ம் ஆண்டு ஆண்டவரைத் தன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டார். திருச்சபை மறுமலர்ச்சிப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, பல திருச்சபைகளில் வேதபோதனை செய்தார். 02.07.1973 அன்று திருமணமான இவருக்கு ஒரு ஆண்மகனும், இரு பெண்பிள்ளைகளும் உண்டு. குடும்பமாக ஊழியத்தைத் தொடர்ந்த செல்லத்துரையை ஆவியானவர் பெலப்படுத்தி, பல பாடல்களுக்கான ராகங்களைத் தந்தார்.

மேனாட்டிசையில் அடிப்படைப் பயிற்சிபெற்ற சகோதரர் செல்லத்துரை ஒரு பாடகர் குழுவை அமைத்து பல நற்செய்திக் கூட்டங்களில் பாடல் ஆராதனையை முன்னின்று நடத்தினார். அக்கார்டியன், மவுத் ஆர்கன்;, மேண்டலின், மற்றும் கீ போர்டு வாசிப்பதில் திறமை பெற்றவர். நற்செய்திக் கூட்டங்களில் பாடுவதற்கென தமிழிலும், தெலுங்கிலும் சேர்;ந்து மொத்தம் 150 பாடல்களை இயற்றி, ராகம் அமைத்திருக்கிறார்.

சகோதரர் செல்லத்துரை ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த செக்கந்திராபாத்தை மையமாகக் கொண்டு தனது ஊழியத்கைதத் தொடர்ந்தார். 1975-ம் ஆண்டு, ஒரு முறை அவர் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது, ஆண்டவர் இப்பாடலின் ராகத்தைதத் தந்தார். ராகத்திற்கேற்ற ஆறுதல் வார்த்தைகளுடன் இப்பாடலை இயற்றி, செக்கந்திரபாத்தில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டத்தில் முதன்முறையாகப் பாடினார். அப்போது கூட்டத்தில் அனைவரும் தேவ பிரசன்னத்தை உணர்ந்தனர். அன்றுமுதல் இப்பாடல் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆறுதலையும், அற்புத சுகத்தையும் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொடுத்து வருகிறது.

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்
ஆவலாய் உன்னைத் தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார் – இயேசு அழைக்கிறார்

Lyrics
Tamil Song Lyrics

எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை நோக்கினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய் — இயேசு

# மத்தேயு

## Matthews 21 - 30



Bible Quiz

1. எருசலேம் தேவாலயத்தில் உள்ள பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் எதற்கு கோபம் அடைந்தார்கள்?
2. இயேசு எங்கு இரவு தங்கினார்?
3. இயேசு;உயிர்த்தெழுதலில்--------------, --------------, இல்லை; அவர்கள் பரலோகத்திலே ---------------,போல் இருப்பார்கள்.
4. பரிசேயர் இடத்தில் இயேசு: கிறிஸ்து யாருடைய குமாரன் என்று கேட்டார், அதற்கு அவர்கள் சொன்ன பதில் என்ன?
5. ----------------------------------, இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போககடவார்கள்.
6. மனுஷகுமாரனுடைய வருகை எப்படி இருக்கும்?
7. ஒரு தாலந்தை வாங்கினவர் என்ன செய்தார்?
8. எந்த பண்டிகை வரும்போது மனுஷகுமாரன் சிலுவையில் பழைய ஒப்புக்கொடுப்பார் என்றார்?
9. சிலுவையில் இயேசுவின் சிரசுக்கு மேலாக என்ன எழுதி வைத்தார்கள்?
10. பதினொரு சீடர்களும் இயேசு சொன்ன எந்த இடத்திற்கு போனார்கள்?

### Sep'2020

விடை எழுதியவர்கள்

திருமதி. நான்சி பாஸ்கர்
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திரு.ஜெயபிரதீப் கிறிஸ்டோபர்
திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட்
திரு. M.C கிறிஸ்டோபர்
திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. எபென் A. பிரசாத்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மேக்டலின்
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ஷாலினி கிங்சிலி



கடந்த மாதம் கேள்விக்கான பதில்

| | |
|---|---|
| 1. மத் 11:7 | 2. மத் 12:42 |
| 3. மத் 13:45 | 4. மத் 14:3 |
| 5. மத் 15:21 | 6. மத் 16:13 |
| 7. மத் 17:1,2,3 | 8. மத் 18:11 |
| 9. மத் 19:23 | 10. மத் 20:17 |



# Prayer Page

என்னை
நோக்கிக்
கூப்பிடு,
அப்பொழுது
நான்
உனக்கு
உத்தரவு
கொடுத்து...
பெரிய
காரியங்
களை
உனக்கு
அறிவிப்
பேன்.

எரேமியா
33:3

## துதிப்போம்



*கடந்த மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.......

* கடந்த மாதம் நமது திருச்சபையில் நடைபெற்ற அனைத்து ஆராதனைகள், ஐக்கிய சங்க கூடுகைகள், CBS. ஊழியம் எந்த தடையும் இல்லாமல் நடை பெற்றதற்காக ஆண்டவரை துதிப்போமாக.....

* நமது குடும்பங்களில் வேலை இடங்களில் ஆண்டவர் நமக்கு செய்த நன்மைக்காக, அற்புதங்களுக்கு ஆண்டவரை துதிப்போமாக....



## ஜெபிப்போம்

நமது தேசங்களுக்காக! தேசங்களில் வாழும் மக்கள் இந்த கொரோனா வைரஸ் நோயிலிருந்து விடுபடவும்,இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், பொருளாதார தேவைகளுக்காகவும் ஜெபிப்போம்.

*நாம் வாழும் இந்த தேசத்தில் UAE- இல் அநேகர் இந்த காலகட்டத்தில் தங்கள் வேலைவாய்ப்புகளை இழக்கின்ற நிலையில் இருக்கின்ற சூழல்கள் மாற ஜெபிப்போமாக....



* நம்முடைய திருச்சபையின் போதகர், ஊழியங்கள், திருச்சபையின் குடும்பங்கள், அனைவருக்குக்காகவும் ஜெபிப்போமாக...



# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - அக்டோபர் 2020

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 1 இராஜா. 3 | எபேசி. 1 | எசேக். 34 | சங்கீதம் 83,84 |
| 2 | 1 இராஜா. 4,5 | எபேசி. 2 | எசேக். 35 | சங்கீதம் 85 |
| 3 | 1 இராஜா. 6 | எபேசி. 3 | எசேக். 36 | சங்கீதம் 86,87 |
| 4 | 1 இராஜா. 7 | எபேசி. 4 | எசேக். 37 | சங்கீதம் 88 |
| 5 | 1 இராஜா. 8 | எபேசி. 5 | எசேக். 38 | சங்கீதம் 89 |
| 6 | 1 இராஜா. 9 | எபேசி. 6 | எசேக். 39 | சங்கீதம் 90 |
| 7 | 1 இராஜா. 10 | பிலி. 1 | எசேக். 40 | சங்கீதம் 91 |
| 8 | 1 இராஜா. 11 | பிலி. 2 | எசேக். 41 | சங்கீதம் 92,93 |
| 9 | 1 இராஜா. 12 | பிலி. 3 | எசேக். 42 | சங்கீதம் 94 |
| 10 | 1 இராஜா. 13 | பிலி. 4 | எசேக். 43 | சங்கீதம் 95,96 |
| 11 | 1 இராஜா. 14 | கொலோ. 1 | எசேக். 44 | சங்கீதம் 97,98 |
| 12 | 1 இராஜா. 15 | கொலோ. 2 | எசேக். 45 | சங்கீதம் 99-101 |
| 13 | 1 இராஜா. 16 | கொலோ. 3 | எசேக். 46 | சங்கீதம் 102 |
| 14 | 1 இராஜா. 17 | கொலோ. 4 | எசேக். 47 | சங்கீதம் 103 |
| 15 | 1 இராஜா. 18 | 1 தெச. 1 | எசேக். 48 | சங்கீதம் 104 |
| 16 | 1 இராஜா. 19 | 1 தெச. 2 | தானியேல் 1 | சங்கீதம் 105 |
| 17 | 1 இராஜா. 20 | 1 தெச. 3 | தானியேல் 2 | சங்கீதம் 106 |
| 18 | 1 இராஜா. 21 | 1 தெச. 4 | தானியேல் 3 | சங்கீதம் 107 |
| 19 | 1 இராஜா. 22 | 1 தெச. 5 | தானியேல் 4 | சங்கீதம் 108,109 |
| 20 | 2 இராஜா. 1 | 2 தெச. 1 | தானியேல் 5 | சங்கீதம் 110,111 |
| 21 | 2 இராஜா. 2 | 2 தெச. 2 | தானியேல் 6 | சங்கீதம் 112,113 |
| 22 | 2 இராஜா. 3 | 2 தெச. 3 | தானியேல் 7 | சங்கீதம் 114,115 |
| 23 | 2 இராஜா. 4 | 1 தீமோ. 1 | தானியேல் 8 | சங்கீதம் 116 |
| 24 | 2 இராஜா. 5 | 1 தீமோ. 2 | தானியேல் 9 | சங். 117,118 |
| 25 | 2 இராஜா. 6 | 1 தீமோ. 3 | தானியேல் 10 | சங். 119:1-24 |
| 26 | 2 இராஜா. 7 | 1 தீமோ. 4 | தானியேல் 11 | சங். 119:25-48 |
| 27 | 2 இராஜா. 8 | 1 தீமோ. 5 | தானியேல் 12 | சங். 119:49-72 |
| 28 | 2 இராஜா. 9 | 1 தீமோ. 6 | ஓசியா 1 | சங். 119:73-96 |
| 29 | 2 இராஜா. 10 | 2 தீமோ. 1 | ஓசியா 2 | சங். 119:97-120 |
| 30 | 2 இராஜா.11,12 | 2 தீமோ. 2 | ஓசியா 3,4 | சங். 119:121-144 |
| 31 | 2 இராஜா. 13 | 2 தீமோ. 3 | ஓசியா 5,6 | சங். 119:145-176 |

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# October

OCTOBER 2020
ALL FRIDAYS
## EVENING SERVICE
6:30 PM TO 7:30 PM
CHURCH MAIN HALL
ALAIN, UAE

FASTING PRAYER
2ND OCT 2020
zoom

8TH OCT 2020
## MEN'S FELLOWSHIP
8:00 PM TO 9:30 PM
zoom

15TH OCT 2020
## WOMEN'S FELLOWSHIP
8:00 PM TO 9:30 PM
zoom

CHILDREN'S
BIBLE SCHOOL
FRIDAYS 4PM
zoom

22ND OCT 2020
## YOUTH FELLOWSHIP
8:00 PM TO 9:30 PM
zoom

# CSI TAMIL PARISH ALAIN, UAE




EDITOR
REV. S. P. BASKAR B.SC. M.A., B.D
THE PRESBYTER,
CSI TAMIL PARISH, ALAIN,
UNITED ARAB EMIRATES
POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630
MOB: 052 803 3843
**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL PURPOSE ONLY

CALLIGRAPHY BY: MRS. OLIVIYA SHERIN